Judicial Form No. 53
(Sec Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, KRISHNAGIRI.

Calendar .. ..
Miscellaneous .. ..
Preliminary Register .. ..
Sessions .. .. CC. No.192 of 2016

PW - 2

Time 01.09 PM -01.16 PM

Name : திரு. சசிகுமார்.
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

(Accused Absent. Petition U/s. 317 Crpc filed and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 2nd day of April 2025.

**முதல் விசாரணை** :

1. என் பெயர் சசிகுமார். நான் திப்பனப்பள்ளியில் குடியிருக்கிறேன். நான் கம்பெனியில் வேலை செய்கிறேன். லட்சுமி என்பவர் எனக்கு அத்தை ஆவார். அவர் வீட்டிற்கு அவருடைய பேத்தி சித்ராவின் கணவர் வந்து பிரச்சினை செய்வதாக என் சித்தி மகள் சித்ரா எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். நான் வருவதற்குள் சம்பவம் நடந்து முடிந்துயிருந்தது. லட்சுமிக்கு தலையில் அடிப்பட்டுயிருந்தது. நான் அவரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேன். மருத்துவமனையில் வந்து போலிசார் வந்து விசாரித்தார்கள். பின் சம்பவயிடத்திற்கு போலிசார் வந்து அக்கம் பக்கம் பார்த்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். ( **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) . என்னுடன் சேர்ந்து காளியப்பன் என்பவர் கையொப்பம் செய்தார். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. லட்சுமி மற்றும் சித்ரா இருவரையும் நான் தான் மருத்துவமனையில் சேர்த்தேனா என்றால் லட்சுமியை மட்டும் தான் சிகிச்சைக்கு சேர்த்தேன். சித்ராவிற்கு அடிப்படவில்லை. நான் போலிசாரிடம் கையெழுத்து போட்டுக்கொடுத்த தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு சித்ரா போன் பன்னி வரச்சொன்னதாக சொன்ன பிறகு வருவதற்கு முன்பே எல்லாம் முடிந்துவிட்டதால் அங்கு என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சொல்லுவது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. லட்சுமி என்பவர் என் அத்தை என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

| | |
|---|---|
| SRIVASTAVA | Digitally signed by SRIVASTAVA |